அவர்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு கல்வி அமைச்சர் மீண்டும் மறுபரிசீலனை செய்து அவருக்குத் தகுந்த விடை அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகள் நல்லமுறையிலேதான் நடந்து வருகின்றன. மேலும் ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளை நடத்துகின்ற நிர்வாகத்தினர் எவரும் இதுவரை மெட்ரிகுலேஷன் பள்ளிகளாக அவற்றை மாற்ற வேண்டுமென்று விண்ணப்பிக்கவில்லை. ஆகவே, இந்தக் கேள்வி எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 77, திரு. மு. வெங்கடராமரெட்டி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

77—

தருமபுரி மாவட்டத்தில் தொல்பொருள் அருங்காட்சியகம் அமைத்தல்.

**35754*—திரு. மு. வெங்கடராம ரெட்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், ஒசூர் (அ) தேன்கனிக்கோட்டையில் ஒரு தொல்பொருள் அருங்காட்சியகம் அமைக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வாய்ப்பு இல்லை.

Thiru. M. Venkatarama Reddi: Mr. Speaker, Sir, in Housur and Denkanikottai Taluks, there are hundreds of stone inscriptions which are centuries old. They are written in Pali and other languages and they depict the history of Dharmapuri District. I have myself seen many of the stone pillars and inscriptions showing the flags and coins used by rulers of successive dynasties of Mysore and other areas, Many of them are now in a dilapidated state and have fallen down. I would like to know whether this government would come forward to preserve those old monuments by setting up a museum at Hosur or

1994 நவம்பர் 9]

Denkanikottai, so that it would be of educative value for the future generations.

Hon. Prof. K. Ponnusami: Hon. Speaker, Sir, the request of the Hon. Member can be considered. But, there is already a special arrangement at Krishnagiri for such purposes and the same can be made use of. However, the Hon. Member may write to the Government detailing the possibilities of setting up a museum at Krishnagiri.

Thiru M. Venkatarama Reddi: Sir, I thank the Hon. Minister for agreeing to consider the proposal and coming forward to set up a museum. I have one more request. I had put this question with the fond hope that, since Dharmapuri District is represented by our Hon. Chief Minister, at least in her period this museum can be set up and the entire history of Dharmapuri District can be collected and preserved there. There are many forts in that area, such as the one named after Kenneth. So, will the Hon. Minister and the Hon. Chief Minister come forward to set up a museum at Hosur, which is an industrial area?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

Hon. Dr. J. Jayalalitha: Hon. Speaker, Sir, I think the Hon. Member has come out with an excellent idea. It is an excellent proposal and we will certainly try to implement it. (Thumping of desks). But, since he wants the entire history of Dharmapuri to be depicted in the museum, I think there is no necessity that it has to be located only in Hosur. Since the Hon. Member himself has pointed out that I represent Dharmapuri District, there is no reason why it should not be located at Bargur. (Thumping of desks). In any case, I think the most appropriate place would be Dharmapuri, since it is the District headquarters. The Government will certainly examine the possibilities of establishing a museum at Dharmapuri. (Thumping of desks).

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மற்றும் ஒரு சிறப்பை தர்மபுரிக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள்.*

வினா எண் 78, திரு. கே. செல்வராஜ், மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர்.

78—

ஒப்பந்தத் தொழிலாளர் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளுதல்

9276–திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஒப்பந்தத் தொழிலாளர் (முறைப்படுத்துதல் மற்றும் நீக்குதல்) சட்டத்தை தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும்போது பணி இழப்பால் பாதிக்கப்படும் ஒப்பந்தப் பணியாளர்களை அந்தந்த தனியார் நிறுவனங்களிலேயே நிரந்தரமாக ஈர்க்கப்படும் வகையில் போதுமான சட்டத் திருத்தங்களை மத்திய அரசு மேற்கொள்ள மாநில அரசு வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒப்பந்தத் தொழிலாளர் முறை ஒரு நிறுவனத்தில் இரத்து செய்யப்படும் பொழுது பணி இழப்பால் பாதிக்கப்படுகின்ற தொழிலாளர்களை முதன்மை வேலையளிப்பவர் நிறுவனத்திலேயே நிரந்தரப் பணியாளர்களாக அமர்த்திக் கொள்ள வகை செய்யும் சட்டத் திருத்தம் கொண்டு வருமாறு மாநில அரசினால் ஏற்கெனவே மத்திய அரசிற்கு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கூறிய கருத்தைப் போல் இன்றைக்கு கோவை, திண்டுக்கல், சேலம் போன்ற இடங்களில் தனியார் பஞ்சாலைக் கம்பெனிகளில் காலி இடங்கள் இருந்தும்கூட, அந்த இடங்களுக்கு நிரந்தரப் பணியாளர்களை நியமிக்காமல், தினக்கூலிகளாக தொழிலாளர்களை வைத்து, வயது குறைவான தொழிலாளர்களை வைத்துக்கொண்டு, 8 மணி நேர வேலைக்கு பதிலாக 12 மணி நேரம் பஞ்சாலைகளில் வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அங்கே காலி இடங்கள் இருந்தும்கூட, இன்னும் அந்தக் கம்பெனிகளில் நிரந்தரத் தொழிலாளர்களை அமர்த்தாமல் இருப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அப்படி இருந்தால் அந்தக்